RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 277 அக்டோபர் 10, 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் த.வெ.க. அபார வெற்றி!

சென்னை, அக்.10-

தாராபுரம், மதுராந்தகம் சட்டசபை தொகுதி இடைத்தேர்தலில் தவெக வெற்றி பெற்றது.

தவெக வெற்றி

மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேலும், தாராபுரம் தொகுதியில் சத்யபாமாவும் வெற்றி பெற்றுள்ளனர். இரு தொகுதிகளிலும் தி.மு.க. வேட்பாளர்களை விட அதிக வாக்குகள் பெற்று த.வெ.க. வேட்பாளர்கள் அபார வெற்றி பெற்றுள்ளனர்.

27 வேட்பாளர்கள் போட்டியிட்ட மதுராந்தகம்

மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதியில் த.வெ.க. சார்பில் மரகதம் குமரவேல், தி.மு.க. சார்பில் பரந்தாமன், அ.தி.மு.க. சார்பில் கணிதா சம்பத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சுகந்தி, நாம் தமிழர் கட்சி சார்பில் ஜானகிராமன் உள்ளிட்ட 27 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்தத் தொகுதியில் மொத்தம் 2,13,788 வாக்காளர்கள் உள்ள நிலையில், 1,84,413 பேர் வாக்களித்தனர். இதன் மூலம் 86.26 சதவீத வாக்குகள் பதிவாகின. பதிவான வாக்குகள் 21 சுற்றுகளாக எண்ணப்பட்டன.



மதுராந்தகத்தில் 17,554 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி

வாக்கு எண்ணிக்கையின் முடிவில் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேல் 61,470 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் பரந்தாமன் 43,916 வாக்குகள் பெற்றார். இதனால் மரகதம் குமரவேல் 17,554 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அ.தி.மு.க. வேட்பாளர் கணிதா சம்பத் 38,770 வாக்குகள் பெற்றார். நாம் தமிழர் கட்சி 1,703 வாக்குகளையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 1,441 வாக்குகளையும் பெற்றன.

தாராபுரத்திலும் த.வெ.க. வேட்பாளர் வெற்றி

தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில் த.வெ.க. சார்பில் சத்யபாமா, தி.மு.க. சார்பில் சுகன்யா, அ.தி.மு.க. சார்பில் பானுமதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் லட்சுமணன், நாம் தமிழர் கட்சி சார்பில் கார்த்திகா உள்ளிட்ட 22 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்தத் தொகுதியில் மொத்தம் 2,23,306 வாக்காளர்களில் 1,79,314 பேர் வாக்களித்தனர். இதன் மூலம் 80.30 சதவீத வாக்குகள் பதிவாகின. பதிவான வாக்குகள் 23 சுற்றுகளாக எண்ணப்பட்டன.

10,196 வாக்குகள் வித்தியாசத்தில் சத்யபாமா வெற்றி

தாராபுரம் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமா 62,596 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். தி.மு.க. வேட்பாளர் சுகன்யா 52,400 வாக்குகள் பெற்றார். இதன் மூலம் சத்யபாமா 10,196 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அ.தி.மு.க. வேட்பாளர் பானுமதி 41,078 வாக்குகள் பெற்றார். நாம் தமிழர் கட்சி 4,954 வாக்குகளையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1,099 வாக்குகளையும் பெற்றன.

தொண்டர்கள் உற்சாகக் கொண்டாட்டம்

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு தொகுதிகளிலும் த.வெ.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அக்கட்சித் தொண்டர்கள் உற்சாகமாகக் கொண்டாடினர். இந்த இடைத்தேர்தல் வெற்றி குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர்கள், கடந்த 4 மாத கால ஆட்சிக்குக் கிடைத்த வெற்றி எனக் கூறி வருகின்றனர்.

## நிறுவனங்களில் மழைநீர் தேங்கினால் ரூ.10 ஆயிரம் அபராதம்: அமைச்சர் அருண்ராஜ் எச்சரிக்கை

சென்னை: அக்.10-

பெரு நிறுவனங்கள் தங்களது வளாகத்தை அதிகளவு மழைநீர் தேங்கும் வகையில் அலட்சியமாக வைத்திருந்தால், ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என சுகாதாரத்துறை அமைச்சர் அருண் ராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை மாநகராட்சி சார்பில் வடபழனி, கெங்கையம்மன் கோயில் தெருவில் காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது. இந்த முகாமை சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கைகளையும் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கினார்.



பின்னர், அவர் கூறியதாவது: டெங்கு தடுப்பு நடவடிக்கையின் முக்கிய பகுதியாக கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பும் கண்டிப்பாக அவசியம். அனைவரும் தங்கள் வீட்டுக்குள்ளும், வீட்டைச் சுற்றிலும், குறிப்பாக மொட்டை மாடியிலும் சென்று பாருங்கள். தேவையற்ற பாத்திரங்கள், சிறிய தொட்டிகள், மூடி, ஆட்டுக்கல், பயன்படுத்தாத பூந்தொட்டிகள் என எதுவாக இருந்தாலும், மழைநீர் தேங்கக் கூடிய வாய்ப்புள்ளவற்றை அப்புறப்படுத்துங்கள்.

பெரிய நிறுவனங்கள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவன அமைப்புகள் தங்கள் வளாகங்களை மழைநீர் தேங்கும் வகையில் அலட்சியமாக வைத்திருந்தால் உடனடியாக ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். மீண்டும் அது தொடர்ந்தால் கூடுதல் அபராதம் விதிக்கப்படும். சென்னை மாநகராட்சி சார்பில் கடந்த 2 மாதங்களில் மட்டும் ரூ.7.50 லட்சம் வரை அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. பலமுறை எச்சரித்தும் நடவடிக்கை எடுக்காத வீடுகளுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த ஜன.1 முதல் அக்.7-ம் தேதி வரை 21,655 பேருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது 301 பேர் டெங்கு பாதிப்பால் உள் நோயாளிகளாக சிகிச்சையில் உள்ளனர். சென்னையில் கொசு ஒழிப்புப் பணிகளுக்காக சென்னை மாநகராட்சியில் மட்டும் 3,700 கொசு ஒழிப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையர் (சுகாதாரம்) தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கவுஷிக், பொது சுகாதாரம், நோய்த் தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் சம்பத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தமிழக உள்துறை செயலர் உள்பட முக்கிய துறை செயலர்கள் இடமாற்றம்

சென்னை: அக்.10-

தமிழக உள்துறை செயலர் உள்பட முக்கியத் துறைச் செயலர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதன் விவரம் வருமாறு:

தமிழக உள்துறை செயலர் கே.மணிவாசன் இடமாற்றம் செய்யப்பட்டார். அவருக்குப் பதிலாக கார்த்திக் ஐஏஎஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கே.மணிவாசன் நில நிர்வாகத் துறை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் ஆணையம் அப்போதைய உள்துறைச் செயலர் தீரஜ்குமாரை மாற்றிவிட்டு கே.மணிவாசனை புதிய உள்துறை செயலராக நியமித்தது.

இந்நிலையில், இப்போது உள்துறை செயலர் மட்டும் மாற்றப்பட்டிருக்கிறார். அவருக்குப் பதிலாக கார்த்திக் ஐஏஎஸ் உள்துறை செயலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல், தேனி ஆட்சியர் வைத்திநாதன் மாற்றப்பட்டு அவர் குடிநீர் வடிகால் வாரிய இணை நிர்வாக இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

குடிநீர் வடிகால் வாரிய இணை நிர்வாக இயக்குநராக இருந்த சிவகிருஷ்ணமூர்த்தி தேனி ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வேளாண் துறை செயலராக என்.வெங்கடேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மின்சார வாரியத் தலைவராக ராஜேஷ் லக்கானி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நிதித்துறை செலவின செயலராக அருண்ராய் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறாக தலைமைச் செயலர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "இந்தியாவின் உண்மையான முதலாளி அம்பானியா?" – எலான் மஸ்க் கேள்வி

புதுடெல்லி: அக்.10-

இந்தியாவில் ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் இணையச் சேவையைத் தொடங்குவதில் தொடரும் தாமதம் காரணமாக, மத்திய அரசு மற்றும் முகேஷ் அம்பானி மீது எலான் மாஸ்க் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.



எக்ஸ் தளத்தில் இது குறித்து பதிவிட்டுள்ள ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனர் எலான் மாஸ்க், "உலகின் 165-க்கும் மேற்பட்ட நாடுகளில் ஸ்டார்லிங்க் சேவைக்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் அனைத்து விதிமுறைகளுக்கும் சட்டங்களுக்கும் உட்பட்டு கடந்த 5 ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், இன்னமும் எங்களுக்கு ஏன் அனுமதி உரிமம் வழங்கப்படவில்லை? இந்தியாவின் உண்மையான முதலாளி அம்பானிதானா?" என கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், தொலைதூர மற்றும் இணைய வசதியற்ற கிராமப்புற இந்தியப் பகுதிகளுக்குக் குறைந்த செலவில் இணையத்தை வழங்குவதே ஸ்டார்லிங்கின் நோக்கம் என்றும், ஏகபோக ஆதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ள முயலும் சில தொழிலதிபர்களின் தடையால் இந்திய மக்களுக்கே பெரும் இழப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

எலான் மஸ்க்கின் குற்றச்சாட்டுகளை மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகம் முற்றிலுமாக மறுத்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 'இந்தியாவின் தொலைத்தொடர்பு விதிமுறைகள் அனைத்தும் வெளிப்படையானவை மற்றும் பாரபட்சமற்றவை. ஸ்டார்லிங்க், ரிலையன்ஸ் ஜியோ மற்றும் பாரதி ஏர்டெல் ஆதரவு பெற்ற ஒன்வெப் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கும் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால், சேவைத் தொடங்குவதற்கு முன்னதாக மேற்கொள்ளப்படும் உள்நாட்டுப் பாதுகாப்புத் தணிக்கை மற்றும் அலைவரிசை ஒதுக்கீட்டு நடைமுறைகள் தற்பொழுது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் பரிசீலனையில் உள்ளன. அனைத்து நிறுவனங்களுக்கும் இந்த விதிமுறை பொதுவானதே' என்று அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

எலான் மாஸ்க்கின் பதிவுகளை ரீட்வீட் செய்துள்ள மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, "இந்தியாவுக்கு வருக எலான்! மற்றொரு நபரையும் நீங்கள் கண்டறியும் வரை காத்திருங்கள்" சூசகமாக பதிவிட்டுள்ளார். அதற்குப் பதிலளித்த எலான் மாஸ்க், "நன்றி ராகுல், இது உண்மையிலேயே கவலையளிக்கும் விஷயம்தான்" எனக் குறிப்பிட்டுள்ளார்.




## யுபிஐ கட்டணத்தை ஏற்றுக்கொள்ளும் வங்கியில் அனைத்து வணிகரும் கணக்கு தொடங்குவோம்

### வணிகர் சங்கங்களின் பேரவை அறிவிப்பு

சென்னை: அக்.10-

யுபிஐ பரிவர்த்தனைக்கு கட்டணம் வசூலிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்ததை கண்டித்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலைவர் எஸ்.சவுந்தர்ராஜன் தலைமையில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்ட ரங்கம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் அவர் பேசியதாவது: யுபிஐ என்பது டிஜிட்டல் பொருளாதாரத்தின் மையப்புள்ளியாக இன்று மாறியுள்ளது. நாட்டின் மொத்த டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் 85 சதவீதம் யுபிஐ மூலமாக நடப்பதால், காகித பரிவர்த்தனையை குறைக்கும் நோக்கம், அதன் இலக்கை நெருங்கிவிட்டது. கடந்த 10 ஆண்டுகளில் யுபிஐ-யின் பயன்பாடு விரிவடைந்தது. கட்டணம் எதுவும் இல்லாததால் வணிக நிறுவனங்களும் உள்ளே இழுக்கப்பட்டன.

சிறு, குறு வணிகர்கள் முதல் பெருநிறுவனத்தினர் வரை அதைகையாளத் தொடங்கினர். ஜிஎஸ்டி, உள்ளூர் வரிகள், வாடகை, மின்கட்டணம், ஊழியர்கள் சம்பளம், பெட்ரோல், டீசல் பயன்பாடு, கடன்கள் என வணிகர்கள் பல்வேறு நெருக்கடியில் தவிக்கும் நிலையில் இந்த யுபிஐ பரிவர்த்தனைக் கட்டணம் கூடுதல் சுமையாகும். யுபிஐ பரிவர்த்தனை கட்டணத்தை ஏற்றுக்கொள்ளும் வங்கிகளில் வணிகர்கள் அனைவரும் கணக்கு தொடங்குவோம். இவ்வாறு அவர் பேசினார்.

## "பெண்களை 50 ஆண்டு பின்னோக்கி இழுத்துச் செல்கிறது தவெக அரசு" – கனிமொழி விமர்சனம்

சென்னை: அக்.10-

தாய்மாமன் சீர், அண்ணனின் சீர்வரிசை என தவெக அரசு பெண்களை மீண்டும் 50 ஆண்டுகள் பின்னோக்கி பழமைவாதத்துக்கு இழுத்துச் செல்லப் பார்க்கிறது என திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி குற்றம் சாட்டினார்.



இதுகுறித்து சென்னையில் நடந்த கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது: பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறிய ஆட்சியாக தவெக ஆட்சி உள்ளது.

பெண்கள் யாரையும் எதிர்பார்த்து நிற்காமல் சொத்துரிமை, கல்வி, வருமானம் பெற்று சுயமரியாதையுடன் சொந்தக் காலில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதே திமுகவின் கொள்கை. ஆனால், தற்போதைய அரசு தாய்மாமன் சீர், அண்ணனின் சீர் வரிசை என்ற பெயரில் பெண்களை மீண்டும் 50 ஆண்டுகள் பின்னோக்கி, பழமைவாதத்திற்கு இழுத்துச் செல்லப் பார்க்கிறது.

மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்களும், குழந்தைகளுக்குத் தேவையான மருந்துகளும் இல்லாத நிலையில், நூற்றுக்கணக்கான கோடி ரூபாயைச் செலவிட்டு ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கும் விளம்பர அரசியலை செய்கிறார்கள். நாடு முழுவதும் ஜிஎஸ்டி வருவாய் 14.7 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், தமிழகத்தில் மட்டும் 5 சதவீதம் குறைந்துள்ளது. இது மாநிலத்தின் நிதி நெருக்கடியையும் பொருளாதாரச் சரிவையுமே காட்டுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**



# நீலகிரி மாவட்டம் அதிகரட்டி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாநில அளவில் தேர்வு

நீலகிரி, அக்.10–
நீலகிரி மாவட்டம் அதிகரட்டி அரசு மேல்நிலை ப்ப ள்ளியின் சீனியர் பாய்ஸ் மற்றும் சூப்பர் சீனியர் பாய்ஸ் த்ரோபால் அணிகள் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெற்று மாநில அளவிலான போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இந்தச் சிறப்பான சாதனையைப் பாராட்டி பள்ளியின் தலைமை ஆசிரியர், அனைத்து ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் மாணவர்களையும், அணியின் வெற்றிக்காக சிறப்பாகப் பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியரையும் மனமார பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.

மாநில அளவிலான போட்டியிலும் மாணவர்கள் வெற்றி பெற்று பள்ளிக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்தினர். மேலும், மாணவர்களின் இந்தச் சாதனைக்கு காரணமான உடற்கல்வி ஆசிரியரின் அர்ப்பணிப்பான பயிற்சி மற்றும் வழிகாட்டுதலையும் பாராட்டினர்.

# உதகை சோலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தாய்சேய் ஊட்டச்சத்து, மனநலத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு

நீலகிரி, அக்.10–
உதகை அருகே சோலூர் சோலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆல் தி சில்ரன் ஆகியன சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கான சிறப்பு மனநலம் மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.



நிகழ்ச்சியில் சோலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் ஹரிபிரகாஷ்

கர்ப்ப காலத்தில் தாய்மார்களின் உடல் நலத்துடன் மனநலத்தையும் பாதுகாப்பது அவசியம், தாய் மற்றும் குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள், முறையான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும். அரசு சுகாதார நிலையத்தில் வழங்கும் சிகிச்சைமுறைகள் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது கர்ப்ப காலத்தில் தாய்மார்கள் ஊட்டச்சத்து நிறைந்த சமச்சீர் உணவுகளை உட்கொள்வது குழந்தையின் சீரான வளர்ச்சிக்கு மிகவும் அவசியம். இரும்புச்சத்து, கால்சியம், போலிக் அமிலம் உள்ளிட்ட அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் கிடைக்கும் வகையில் காய்கறிகள், கீரைகள், தானியங்கள் மற்றும் பழங்களை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், கர்ப்பிணிப் பெண்கள் உடல் நலத்துடன் மனநலத்தையும் பேணிப் பாதுகாப்பது அவசியம், அதிகப்படியான மன அழுத்தம், பதற்றம் மற்றும் கவலை போன்றவற்றைத் தவிர்த்து மகிழ்ச்சியான மற்றும் ஆதரவான சூழலில் இருப்பது முக்கியம் என்றார்.

ஆல் தி சில்ரன்' அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் பேசுகையில், பெண் குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் குடும்பம் மட்டுமின்றி சமூக அமைப்புகளுக்கும் முக்கியப் பங்கு உள்ளது.

கர்ப்ப காலத்தில் ஏற்படும் உடல்நலப் பிரச்சினைகள் அல்லது மனநல மாற்றங்களை அலட்சியப்படுத்தாமல், உரிய நேரத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுகி மருத்துவ ஆலோசனை பெற வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் சோலூர், கோக்கல் உள்ளிட்ட பல்வேறு கிராமப் பகுதிகளைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்கள், அவர்களின் குடும்பத்தினர், செவிலியர்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.






# லட்சிய ஜனநாயகக் கட்சி மாநிலப் பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட்டம்

பல்லாவரம், அக்.10–
செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் பல்லாவரத்தில் லட்சிய ஜனநாயகக் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற விழாவில், கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்துகொண்டு பிறந்தநாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் பேனா மற்றும் பொது மக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் கட்சியின் மாநில, மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

மாநில அமைப்பு செயலாளர் எஸ் எஸ் விஜய், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் அருண், மாநில சுற்றுச்சூழல் அணி செயலாளர் அருண் பாண்டியன் ஆகியோர் அறிவித்தலின்படி செங்கல்பட்டு வடக்கு மாவட்டச் செயலாளர் சையத் மோஹீமீன், மாவட்ட துணைச் செயலாளர் லட்சுமி காந்த், மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் ரமேஷ், சிறப்பாகச் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாநில முதன்மை அமைப்பு செயலாளர் சிவகார்த்திகேயன், கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் உணவுகளை வழங்கினர் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் இம்ரான், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ஸ்ரீதரன், இளைஞர் அணி பிரவீன் ராஜ், கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் பங்கேற்புடன் பிறந்தநாள் விழா சிறப்பாக நடைபெற்றது.





# ஊத்துக்கோட்டை அருகே சுருட்டபள்ளி சிவன் கோவிலில் சிறப்பு பிரதோஷபூஜை

திருவள்ளூர், அக்.10–
ஊத்துக்கோட்டை அருகே நாகலாபுரம் மண்டல் சுருட்ட பள்ளியில் அமைந்திருக்கும் ஸ்ரீ பள்ளிகொண்டீஸ்வரர் சிவன் ஆலயத்தில் சிறப்பு ப்ரதோஷ பூஜை மிக விமர்சியாக நடைபெற்றது இப்பூஜையை கோவில்நிர்வாக சேர்மன் D.பத்மநாபராஜு மற்றும் செயல் அலுவலர், தர்மகத்தா உறுப்பினர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# ராணிப்பேட்டையில் ஸ்ரீ சந்தான விநாயகர் ஆலய மண்டலா அபிஷேக விழா

ராணிப்பேட்டை, அக்.10
ராணிப்பேட்டை மாவட்டம் நவலப்பூர் சங்கம் தெருவில் எழுந்தருளி அருள்பாளித்து வரும் அருள்மிகு ஸ்ரீ சந்தான விநாயகர் ஆலயத்தின் மண்டலபிஷேக பூர்த்தி விழா வெகு விமர்சையாக நடைபெற்றது முன்னதாக சிறப்பு பூஜைகள் செய்து சிலம்பாட்டம் புலியாட்டம் மேல தாளம் வழங்கப்பட்ட சந்தை மேடை ஓம் சக்தி ஆலயத்திலிருந்து 108 பால்குடம் ஊர்வலம் நடைபெற்றது அதனைத் தொடர்ந்து காளஹஸ்தாபனம் 108 சங்காபிஷேகம் மகா ஓமம் ஆகியவை சிறப்பாக நடைபெற்றது இதில் விரதம் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சி ஸ்ரீ சந்தான விநாயகர் ஆலய நிர்வாகிகள் இளங்கோ கார்த்தி காந்தி சரவணன் மற்றும் ஊர் நாட்டான்மைதாரர்கள் பொதுமக்கள் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக ஆற்காடு நகர மன்ற தலைவர் சுஜாதா வினோத் கலந்து கொண்டு அன்னதானத்தை துவக்கி வைத்து சிறப்பித்தார். இதில் ஏராளமான பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.







# தமிழ்நாடு வெற்றி திட்டம்: கப்பலூர் ஊராட்சியில் வீடு வீடாகக் கணக்கெடுப்புப் பணி!

மதுரை, அக்.10–
தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வெற்றி (TN-VETRI) திட்டத்தின் ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கப்பலூர் ஊராட்சியில் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கப்பலூர் ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் ஜோதி பாசு தலைமையில் நடைபெறும் இப்பணியில், கிராம மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் குறித்த விவரங்கள்சேகரிக்கப்படுகின்றன.

இதன்படி, தெரு மின்விளக்குகள், சாலை வசதிகள், குடிநீர் விநியோகம், ஆழ்துளைக் கிணறுகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், கழிவுநீர் வடிகால் அமைப்புகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட தேவைகள் குறித்து பொதுமக்களிடம் நேரடியாகக் கேட்டறிந்து பதிவு செய்யப்படுகிறது. மேலும், சுகாதார வசதிகள் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேவைகளும் கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்படுகின்றன.

கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதுடன், பொதுமக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடுவதே இத்தகைய கணக்கெடுப்பின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து, தேவைக்கேற்ப வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான தகவல்களைத் திரட்ட முடியும்.

மேலும், குடிசை வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு கான்கிரீட் வீடுகள் வழங்குவது உள்ளிட்ட வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டங்களும் ஊரக வளர்ச்சியின் முக்கிய அம்சங்களாக உள்ளன.

கிராம மக்களின் தேவைகளை நேரடியாகக் கேட்டறிந்து பதிவு செய்யும் இப்பணி, கப்பலூர் ஊராட்சியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும், மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.







Date: 08.10.2026

விடுநர்:
நாகராஜ் த/ப வாசு
1 வார்டு வாழும் மக்கள்,
ஊத்துக்கோட்டை மேற்கு கால்வாய் கரை,
திருவள்ளூர் மாவட்டம்-602026.
Cell: 9003941553

பெறுநர்:
உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
ஊத்துக்கோட்டை மின்வாரிய அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்-602026.

பொருள்:
ஊத்துக்கோட்டை கிராமம், அங்காளம்மன் கோவில் அருகில், மேற்கு காவாக்கரை பகுதியில் சேதமடைந்துள்ள பழைய மின்கம்பத்தை மாற்றித் தரக் கோருதல் – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா:
திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை கிராமத்தில் அங்காளம்மன் கோவில் அருகிலுள்ள மேற்கு காவாக்கரை பகுதியில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக மின்கம்பம் ஒன்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

தற்போது அந்த மின்கம்பம் மிகவும் பழுதடைந்து, அதன் மேற்புறத்தில் உள்ள சிமெண்ட் பூச்சுகள் மற்றும் கட்டுமானப் பகுதிகள் உதிர்ந்து கீழே விழுந்து வருகின்றன. **இப்பகுதியில் குழந்தைகள் விளையாடும் நேரங்களில் மேலிருந்து சிமெண்ட் துண்டுகள் விழுவதால், குழந்தைகளுக்கு காயம் ஏற்படும் அபாயம் உள்ளது.** மேலும், மின்கம்பம் மேலும் சேதமடைந்தால் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உள்ளது.

எனவே, பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட மின்வாரிய அலுவலர்கள் நேரில் ஆய்வு செய்து, சேதமடைந்துள்ள அந்த பழைய மின்கம்பத்தை உடனடியாக அகற்றி, புதிய மின்கம்பம் அமைத்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விபத்து ஏற்படுவதற்கு முன்பாக உரிய நடவடிக்கை எடுத்து, இப்பகுதி பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

இணைப்பு:
1. சேதமடைந்த மின்கம்பத்தின் புகைப்படம்
2. பொதுமக்கள் கையெழுத்துப் பட்டியல் (தேவையெனில்)

# புரட்சிபாரதம் கட்சி நிர்வாகிகள் ஊத்துக்கோட்டை மேற்கு காவாக்கரையில் பழுதடைந்துள்ள 25 ஆண்டுகால மின் கம்பத்தை மாற்ற கோரி மனு

திருவள்ளூர், அக்.10–
ஊத்துக்கோட்டை பேரூராட்சி மேற்கு காவலாக்கரை செங்காளம்மன் கோவில் தெருவில் 25 ஆண்டு காலமான மின்கம்பம் பழுதடைந்து அப்பகுதயில் உள்ள மக்களுக்கு பேரபத்து ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அதனை மாற்ற வேண்டு புரட்சிபாதம் கட்சி நிர்வாகிகள் நாகராஜ் மற்றும் டேவிட்முருகன் மற்றும் அப்பகுதி மக்கள் மின்வாரிய பொறியாளரிடம் மனு அளித்தார்.



# மலேசியாவில் சர்வதேச அளவிலான சிலம்பம் போட்டி- ஆவடி சிலம்பம் வீரர்கள் சாதனை

மாதவரம், அக்.10–
மலேசியாவில் சர்வதேச சிலம்ப போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் இந்தியா, மலேசியா, தாய்லாந்து, பங்களாதேஷ், இந்தோனேசியா, சிங்கப்பூர், வியட்நாம், நேபால், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகலிருந்து சுமார் 500க்கும் மேற்பட்ட சிலம்ப வீரர்கள் கலந்துகொண்டனர். அதில் இந்தியா தமிழ்நாடு திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் இயங்கிவரும் சேப்பா அகாடமி சார்பில் டாக்டர் மாஸ்டர் ராஜா மற்றும் டாக்டர் மாஸ்டர் சங்கீதா ஆகியோர் தலைமையில் சிலம்ப வீரர்கள் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்றனர். அதில் நான்கு தங்கப்பதக்கம், மூன்று வெள்ளி பதக்கம், இரண்டு வெண்கல பதக்கங்களை வெற்றி பெற்று சாதனை படைத்தனர். பின்னர் சென்னை திரும்பிய சாதனை படைத்த சிலம்ப வீரர்களை பெற்றோர்கள் ,சகமாஸ்டர்கள் உற்சா கமாக வரவேற்று இனிப்புகளை வழங்கி வாழ்த்தினர். இதில் மூத்த சிலம்பம் மாஸ்டர் முருக்கனி உள்ளிட்ட சிலம்ப மாணவர்கள் உடனிருந்தனர்.



■ தேசிய நெடுஞ்சாலை எண் 38–ல், மதுரை திருச்சி சாலையில், மேலூர் வட்டம், பந்தங்குடி பகுதியில் சாலைப் பாதுகாப்பு வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா ஆய்வு மேற்கொண்டார்.இந்த ஆய்வின் போது, வளைவுகளுக்கு முன்பாக அதிர்வுப் பட்டைகள் (Rumbling Strips) அமைத்தல், அனுமதியற்ற இருசக்கர வாகனக் குறுக்குப் பாதைகளைத் தடுத்தல், செயல்படாத எச்சரிக்கை மின்விளக்குகளைச் சீரமைத்தல் மற்றும் சேதமடைந்த உலோகத் தடுப்புகளை (Metal Beam Crash Barriers) மாற்றுதல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.



# தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் 29 வது மாபெரும் இரத்ததான முகாம்

தாம்பரம், அக்.10–

செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் 29வது மாபெரும் இரத்ததான முகாம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியின் கல்வி குழும முதன்மை செயல் அதிகாரி முனைவர் சாய்பிரகாஷ் லியோ முத்து தலைமையில் லியோ முத்து உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. மாபெரும் இரத்தான முகாமை கல்வி குழும முதன்மை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து தொடங்கி வைத்து மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். இதனை தொடர்ந்து மருத்துவர்கள் உடல் பரிசோதனைக்கு பின் இரத்ததானம் அளித்தார் முனைவர் சாய்பிரகாஷ் லியோமுத்து, இரத்ததான முகாமில் 2342 மாணவ, மாணவிகள் இரத்ததானம் அளித்தனர். இரத்ததானம் அளிக்க வருபவர்களிடம் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உடலின் சர்க்கரை அளவு, இரத்த அழுத்தம் உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொண்ட பிறகு இரத்ததானம் அளிக்க அனுமதிக்கபடுகின்றனர். இந்த முகாமில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் உட்பட 19 மருத்துவமனைகள் கலந்து கொண்டு சிறந்த மருத்துவர்கள் செலிவியர்களை கொண்டு நடத்தபட்டது. இதில் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி முதல்வர்முனைவர் ராஜா, தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் முனைவர் பழனிகுமார், மேலாண்மை இயக்குநர் முனைவர் மாறன் உட்பட ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.





# காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி: போதைப்பொருள் பழக்கத்திலிருந்து இளைஞர்களைப் பாதுகாப்பது அனைவரின் கூட்டுப் பொறுப்பு துணைவேந்தர் பேராசிரியர் ஜெ. ஜெயகாந்தன் வலியுறுத்தல்!

காரைக்குடி, அக்.10–

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரி சார்பில், 'காட்சிப்பட விளக்கத்தின் மூலம் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி' அக்டோபர் 9-ஆம் தேதி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் உடல், மன மற்றும் சமூகப் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

துணைவேந்தர் தலைமையில் விழிப்புணர்வு!

நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் ஜெ.இ. மெர்லின் சசிகலா வரவேற்புரை வழங்கினார்.

அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொறுப்பு) பேராசிரியர் ஜெ. ஜெயகாந்தன் தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

மாணவர்களே நாட்டின் எதிர்காலத் தூண்கள். அவர்களின் உடல் ஆரோக்கியம், மனநலம், கல்வி மற்றும் எதிர்காலத்தைப் பாதுகாப்பது அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும்.

போதைப்பொருள் பழக்கம் ஒருவரின் உடல்நலத்தை மட்டுமின்றி, குடும்ப உறவுகள், கல்விச் செயல்திறன் மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகளையும் கடுமையாகப் பாதிக்கிறது.

எனவே, மாணவர்கள் தீய பழக்கவழக்கங்களிலிருந்து விலகி, சுயக்கட்டுப்பாடு, நேர்மறைச் சிந்தனை மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்ற வேண்டும்.

போதைப்பொருள் பயன்பாட்டின் அபாயங்கள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் கல்வி நிறுவனங்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும்.

மாணவர்கள் தங்களது நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் சமூகத்தினரிடையே போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வைப் பரப்பி, போதையற்ற சமுதாயத்தை உருவாக்க முன்வர வேண்டும் என வலியுறுத்தினார்.

போதைப்பொருளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மருத்துவ நிபுணர் விளக்கம்!

காரைக்குடி குளோபல் மிஷன் மருத்துவமனையின் நிறுவனர் தலைவர் டாக்டர் வி. குமரேசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் உடல்நலப் பாதிப்புகள், மனநலப் பிரச்சினைகள், குடும்ப மற்றும் சமூக உறவுகளில் ஏற்படும் சிக்கல்கள், பொருளாதார இழப்புகள் உள்ளிட்டவை குறித்து விளக்கினார்.

குறிப்பாக, இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாகாமல் ஆரோக்கியமான மற்றும் பொறுப்பான வாழ்க்கையை முன்னெடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

பேராசிரியர்கள், மாணவர்கள் திரளாகப் பங்கேற்பு!

நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பேராசிரியர் சி. வேதிராஜன், பேராசிரியர் கே. பாலமுருகன், பேராசிரியர் பி. வசீகரன், கல்வியியல் புல முதன்மையர் பேராசிரியர் ஜி. கலையரசன், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பேராசிரியர் எம். ஜோதிபாசு, நிதி அலுவலர் பேராசிரியர் எஸ். சந்திரமோகன், பேராசிரியர் ஜெ. சுஜாதாமாலினி, தொலைநிலைக் கல்வி இயக்குநர் பேராசிரியர் இ. கண்ணபிரான் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேலும், பல்கலைக்கழகத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், வாக்கர்ஸ் கிளப், லயன்ஸ் கிளப் மற்றும் காரைக்குடி வொண்டர்ஸ் ரோட்டரி கிளப் உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

ராஜா ராஜன் கல்லூரி, உமையாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மாதிரிப் பள்ளி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ, மாணவிகள், முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியியல் கல்லூரி மாணவ ஆசிரியர்களும் திரளாகக் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் காட்சிப்பட விளக்கங்கள் மூலம் போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்புச் செயலாளராக உதவிப் பேராசிரியர் டாக்டர் அ. பியோ அல்பினா செயல்பட்டார்.

'போதையற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்; இளைஞர்களைப் பாதுகாப்போம்' என்ற விழிப்புணர்வு செய்தி நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது.



# திருப்பத்தூர் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் நல்லசிவன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

திருப்பத்தூர், அக்.10–

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் வகையில், திருப்பத்தூர் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் நல்லசிவன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம், பொதுமக்கள் அரசு அலுவலகங்களிடம் தகவல்களைப் பெறுவதற்கான உரிமைகள் மற்றும் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்தப் பேரணி நடைபெற்றது. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து தொடங்கிய பேரணி, தூய நெஞ்சக் கல்லூரி வரை நடைபெற்றது. இதில் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட 500–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியபடி ஊர்வலமாகச் சென்றனர். இந்த விழிப்புணர்வு பேரணியின் மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த புரிதலை மக்களிடையே அதிகரிப்பதுடன், தங்களுக்கான சட்டப்பூர்வ உரிமைகளை அறிந்து செயல்பட வேண்டும் என்ற விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.



விளையாட்டு விடுதியில் தங்கிப்பயிலும் பள்ளி மாணவர்கள் பள்ளி செல்வதற்கு ஏதுவாக, ஒதுக்கீடு செய்யப்பட்ட பேருந்தினை மாவட்ட வருவாய் அலுவலர். ப.ராஜகுமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

தேனி, அக்.10–

தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் விளையாட்டு விடுதியில் தங்கிப்பயிலும் பள்ளி மாணவர்கள் பள்ளி செல்வதற்கு ஏதுவாக, ஒதுக்கீடு செய்யப்பட்ட பேருந்தினை மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார். தேனி மாவட்ட விளையாட்டு விடுதியில் தங்கி பயிற்சி பெறும் மொத்தம் 81 பள்ளி மாணவர்களில் 24 மாணவர்கள் நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், 57 மாணவர்கள் தேனி-அல்லிநகரம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியிலும் பயின்று வருகின்றனர். விளையாட்டு விடுதியில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவர்கள் எவ்வித சிரமமுமின்றி பள்ளிக்குச் சென்று வருவதற்கு ஏதுவாகவும், அவர்களின் போக்குவரத்துத் தேவையினை நிறைவு செய்யும் வகையிலும் பேருந்து சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பேருந்து சேவை காலை 08.30 மணிக்கு விளையாட்டு விடுதியிலிருந்து பள்ளிக்கும், மாலை 04.30 மணிக்கு பள்ளியிலிருந்து விளையாட்டு விடுதிக்கும் இயக்கப்படும். இதன்மூலம் விளையாட்டு விடுதியில் தங்கிப் பயிற்சி பெறும் மாணவர்கள் குறித்த நேரத்தில் பள்ளிக்குச் சென்று கல்வி பயில்வதுடன், தங்களது விளையாட்டுப் பயிற்சியையும் தொடர்ந்து மேற்கொள்ள வழிவகை ஏற்படும். மாணவர்களின் கல்வி மற்றும் விளையாட்டுத் திறன் மேம்பாட்டிற்கு உதவும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்நடவடிக்கை, அவர்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்வதோடு, அன்றாடப் பயணத்தையும் எளிதாக்கும்.இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் துணை மேலாளர் .ஜெகதீசன், கிளை மேலாளர்.பாண்டியராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அலட்சியம்: தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்க மாநிலத் தலைவர் ஜான்போஸ்கோ வலியுறுத்தல்

சென்னை, அக்.10–

தமிழக அரசின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் (NHIS) கீழ் இணைக்க ப்பட்டுள்ள கிராம ஊராட்சி செயல ர்களிடம் 2026– 2027–ஆம் ஆண்டிற்கான காப்பீட்டு பிரீமியம் தொகை முழுமையாகப் பிடித்தம் செய்யப்ப ட்டுள்ள நிலையிலும், மருத்துவ சிகிச்சை பெறுவதில் கடுமையான இடையூறுகள் நீடித்து வருவதாகத் தமி ழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. பிரீமியம் செலுத்தியும் சிகிச்சை மறுப்பு: ஊராட்சி செயலர்கள் டயாலிசிஸ், புற்றுநோய், சிறுநீரகச் சிகிச்சை, இருதய அறுவை சிகிச்சை மற்றும் அவசர கால மருத்துவச் சிகிச்சைகளுக்காக மருத்துவமனைகளுக்குச் செல்லும்போது, அங்கிருக்கும் NHIS திட்ட அலுவலர்கள் "பிரீமியம் செலுத்தப்பட்ட விபரம் இணையதளத்தில் இன்னமும் பதிவேற்றம் செய்யப்படவில்லை" எனக் கூறிச் சிகிச்சைக்கான கட்டணத்தை வழங்க மறுக்கின்றனர். இதனால் பிரீமியம் செலுத்தியும் சிகிச்சை பெற முடியாமல் பணியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் கடும் மன உளைச்சலுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் ஆளாகி வருகின்றனர். குறிப்பாக



அவசர சிகிச்சைகள் மற்றும் தொடர்ச்சியான டயாலிசிஸில் பண நெருக்கடி காரணமாக ஏற்படும் தாமதம் பணியாளர்களின் உயிருக்கே ஆபத்தாக முடியும் சூழ்நிலை உருவாகியுள்ளது.85 நாட்கள் கடந்தும் தீரவில்லை: பிரீமியம் தொகை செலுத்தப்பட்டு 85 நாட்கள் கடந்துள்ள போதிலும் இப்பிரச்சனைக்கு இதுவரை நிரந்தரத் தீர்வு காணப்படவில்லை. இது ஊராட்சி செய லர்கள் மத்தியில் பெரும் அதி ருப்தியை ஏற்படுத்தியுள்ளதோடு, குடும்பத்தினர் மத்தியில் அரசிற்கும் அவப்பெயரை உருவாக்கி வருகிறது. மேலும், 01.07.2026 முதல் NHIS திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்ற ஊராட்சி செயலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மருத்துவச் சிகிச்சை நிலுவைத் தொகைகளையும் உடனடியாக வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மாநிலத் தலைவர் வலியுறுத்தல்: இது தொடர்பாகத் தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் அ. ஜான்போஸ்கோ பிரகாஷ், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு அறிக்கை/மனு அனுப்பியுள்ளார்.அதில், பிரீமியம் தொகை செலுத்தப்பட்டுள்ள அனைத்து கிராம ஊராட்சி செயலர்களுக்கும் NHIS திட்டத்தின் கீழ் தடையின்றி மருத்துவச் சிகிச்சை பெற போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இதே கோரிக்கையை நிறைவேற்றப்பட வேண்டுமென மதுரை மாவட்டத்தில் மாவட்ட தலைவர் கணேசன், செயலாளர் குமார், பொருளாளர் விவேகானந்தன், மதுரை மண்டல ஒருங்கிணைப்பாளர் ஜோதிபாசு ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



# பழனியில் வெகு விமர்சையாக நடைபெற்ற விஸ்மோனி நிதி நிறுவனம் கிளை தொடக்க விழா

திண்டுக்கல், அக்.10–

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் விஸ்மோனி நிதி நிறுவனம் தனது 369 வது கிளையை தொடங்கியது. கொச்சின் மாநகரில் தனது நிறுவனத்தை தொடங்கிய விஸ்மோனி இன்று இந்தியாவில் 369 கிளைகளை கொண்டுள்ளது.

முன்னதாக பழனி பகுதி மக்கள் இந்த நிதி நிறுவனத்தின் மூலம் பயணத் தீர்வுகளை நேரடியாக பெற முடியும். குறிப்பாக 8 நிமிடங்களில் தங்க நகை கடன் பெற முடியும். மேலும் நிதி மற்றும் பயண தீர்வுகளை அனைத்து தரப்பு மக்களும் எளிதாகவும் பாதுகாப்பாகவும் அணுகக் கூடிய வகையில் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

அதுமட்டுமின்றி வெளிநாடுகளுக்கு பணம் அனுப்புதல், அந்நிய செலவாணி, பல நாணய பயண அட்டை பயணம், டிஜிட்டல் கொடுப்பனவுகள், காப்பீடு போன்ற சேவைகளையும் இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

தொடர்ந்து சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் இந்த நிறுவனம் பழனியில் உள்ள அவார்ட் அறிவுசார் மாற்றுத்திறனாளிகள் பள்ளிக்கு தண்ணீர் சுத்திகரிப்பான் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு பள்ளி பைகளை வழங்கினர். முன்னதாக வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப நல் மதிப்பை பெற்றதன் அடிப்படையிலேயே நிறுவனம் மேலும் மேலும் வளர்ந்து மக்களுக்கு சேவையாற்றி வருகிறது என நிறுவனத்தின் இயக்குனர் கிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் திறப்பு விழாவில் மேத்யூ, சதீஷ்குமார், ரதீஷ் பிரகாஷ் ,பாஸ்கர், ஜான் சார்ஜ், டைட்டஸ் ,பாலகிருஷ்ணன், ஜீவிதா மற்றும் உள்ளூர் பிரமுகர்கள், வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பெரியகுளம் அருகே இ. புதுக்கோட்டையில் சுதந்திர போராட்ட தியாகி இமானுவேல் சேகரன் 102 வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

தேனி, அக்.10–

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே இ. புதுக்கோட்டையில் சுதந்திர போராட்ட தியாகி இமானுவேல் சேகரனார் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி கொண்டாடினர். 8 மற்றும் 9 ஆகிய இரு நாட்களில் நடைபெறும் முதல்நாள் நிகழ்ச்சிக்கு வீரபாண்டி பேரூராட்சி தலைவர் கீதா சசி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாநில அளவில் சிலம்பாட்ட போட்டியில் கலந்து கொள்ளும் மணவர்களுக்கு ஊக்கத்தொகை, பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு ஆண்டு பொது தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்த பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, முதியோர் மற்றும் விதவை பெண்களுக்கு உதவி தொகை மற்றும் இளைஞர்களுக்கு விளையாட்டு பொருட்கள் ஆகியவை வழங்கி பேசுகையில் அவர் பேசுகையில் " பள்ளி மாணவ மாணவிகள் எக்காரணம் கொண்டு இடைநிறுத்தம் கூடாது . அதிலும் குறிப்பாக மாணவிகள் படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும். இப்போதுதான் அந்த குடும்பம் நன்றாக இருக்கும் . கல்வி தொடர்பான உதவிகள் எப்போது வேண்டுமானாலும் என்னை தொடர்பு கொள்ளலாம். சென்ற வருடம் நான் இந்த பகுதியில் இதுபோன்று பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்தேன். மேலும் இனிவரும் காலங்களிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை இ.புதுக்கோட்டை மக்களுக்கு செய்வேன்" என்று இவ்வாறு பேசினார். இந்த நிகழ்ச்சியை சூரிய பிரகாஷ், வழக்கறிஞர் பாலு மகேந்திரன் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்து ஏற்பாடு செய்திருந்தனர். கிராம இளைஞர்களான தமிழ்செல்வன், பிரசாத் உள்ளிட்ட பள்ளி மாணவ மாணவிகள் ஏராளமான பெண்கள் என பலர் கலந்து கொண்டனர். முன்னதாக வீரபாண்டி பேரூராட்சி தலைவர் கீதா சசிக்கு தேவேந்திர குல வேளாளர் இளைஞர்கள் சார்பில் பட்டாசு, வானவேடிக்கை மற்றும் பள்ளி மாணவர்கள் சார்பில் சிலம்பாட்டம் ஆடி உற்சாக வரவேற்பு அளித்தனர்.


**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் திருவள்ளூர்**

R.வேணுகோபால்
த/பெ. ரங்கப்பநாயுடு
எண்-45 பெரிஞ்சேரி கிராமம்
போந்தவாக்கம் &அஞ்சல்
ஊத்துக்கோட்டை வட்டம்
திருவள்ளூர் மாவட்டம் -602026.
-மனுதாரர்

எதிர்-

1. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம்.
-எதிர்மனுதாரர்

பொதுஅறிவிப்பு

மேற்கண்ட விலாசத்தில் வசித்துவரும் R.வேணுகோபால் த/பெ. ரங்கப்பநாயுடு என்பவர் 12.06.1969-ல் பெரிஞ்சேரி கிராமம் போந்தவாக்கம் அஞ்சல் ஊத்துக்கோட்டை வட்டம் திருவள்ளூர் மாவட்டம்-602026என்ற முகவரியில் பிறந்ததாகவும் தனது பிறப்பை அறியாமையின் காரணத்தினால் பிறப்பு பதிவேட்டில் பதிவுசெய்ய தவறிவிட்டார் எனவும் ஆகவே தனது பிறப்பை பதவி செய்ய கோரி மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் திருவள்ளூர் அவர்களிடத்தில் மனு அளித்துள்ளார் இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருக்கும் பட்சத்தில் இந்த விளம்பரம் வெளியிட்ட 15 நாட்களுக்குள் ஆட்சேபனை தெரிவிக்க வேண்டியது தவறும் பட்சத்தில் மனுதாரர் R.வேணுகோபால் அவர்களுக்கு சாதகமாக அறிவிப்பு வெளியிடம்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**இப்படிக்கு**
**M.தினகரன் MA,BL.**
**மனுதாரர்**
**வழக்கறிஞர்**
**ஊத்துக்கோட்டை.**

# சிவகங்கையில் செம்மண் கடத்தல் வழக்கில் 2 பேர் கைது!



சிவகங்கை அக்-10–
சிவகங்கை மாவட்டம், எஸ்.வி.மங்கலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சூரக்குடி பகுதியில், அனுமதியின்றி செம்மண் தோண்டி எடுத்துச் சென்றதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில் இரண்டு பேரைக் காவல்துறையினர் கைது செய்தனர்.

மேலும், செம்மண் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஹிட்டாச்சி இயந்திரம் மற்றும் TN 21 BZ 4321 என்ற பதிவு எண் கொண்ட லாரி ஆகியவற்றைப் போலீசார் பறிமுதல் செய்தனர்.

அரசு அலுவலர்களைத் தாக்கியதாகப் புகார்!

சூரக்குடி பகுதியில் அனுமதியின்றி செம்மண் தோண்டி எடுத்துச் செல்லப்படுவதாகக் கிடைத்த தகவலின் பேரில், அதனைத் தடுக்க கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம நிர்வாக உதவியாளர் சென்றுள்ளனர்.

அப்போது, அவர்களைப் பணி செய்யவிடாமல் தடுத்து, தகாத வார்த்தைகளால் பேசி, தாக்கி, கொலை மிரட்டல் விடுத்ததாகக் காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டது.

இந்தப் புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

ஹிட்டாச்சி, லாரி ஓட்டுநர்கள் கைது!

விசாரணையைத் தொடர்ந்து, அருண் பாண்டி (25) சோழவந்தான் பகுதியைச் சேர்ந்த ஹிட்டாச்சி இயந்திர ஓட்டுநர்.

அரிஷ் (32) திருச்சி மாவட்டம் முசிறியைச் சேர்ந்த லாரி ஓட்டுநர்.

ஆகிய இருவரையும் காவல்துறையினர் கைது செய்தனர்.

மேலும், செம்மண் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஹிட்டாச்சி இயந்திரம் மற்றும் அதனை ஏற்றிச் செல்ல வந்த லாரி ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த வழக்கில் தொடர்புடைய மற்ற நபர்கள் குறித்தும் காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எச்சரிக்கை!

சிவகங்கை மாவட்டத்தில் அனுமதியின்றி கனிம வளங்களை வெட்டி எடுத்தல், கடத்தல் மற்றும் அரசு அலுவலர்களைப் பணி செய்யவிடாமல் தடுத்து அச்சுறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா எச்சரிக்கை விடுத்துள்ளார்.



## திருப்பூர் புதிய பேருந்து நிலையத்தில் தூய்மைப் பணிகள் தீவிரம்: சுகாதார அதிகாரிகளின் சிறப்பான நடவடிக்கையால் சுத்தமாகக் காட்சியளிக்கும் பேருந்து நிலையம் பயணிகள் பாராட்டு!

திருப்பூர், அக்.10–
திருப்பூர் புதிய பேருந்து நிலையத்தில் சுகாதார அதிகாரிகளின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணிகளால், பேருந்து நிலைய வளாகம் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட்டு வருவது பயணிகள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

திருப்பூர் சுகாதாரத்துறை எஸ்.ஓ. கோகுல்நாதன் மேற்பார்வையில், சுகாதார ஆய்வாளர்கள் (எஸ்.ஐ.) மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால் பேருந்து நிலைய வளாகத்தில் தேங்கியிருந்த குப்பைகள் அகற்றப்பட்டு, சுற்றுப்புறப் பகுதிகள் தூய்மைப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மற்றும் பயணிகள் அதிகளவில் வந்து செல்லும் புதிய பேருந்து நிலையத்தில் தூய்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதால், பயணிகளுக்குச் சுகாதாரமான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, பேருந்து நிலைய வளாகத்தில் குப்பைகள் அகற்றப்பட்டு, சுற்றுப்புறங்கள் சுத்தமாகப் பராமரிக்கப்படுவது பொதுமக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பேருந்து நிலையத்தைச் சுகாதாரமாகப் பராமரித்து வரும் எஸ்.ஓ. கோகுல்நாதன் மற்றும் சுகாதார ஆய்வாளர்களின் பணிகளைப் பயணிகள் பாராட்டி வருகின்றனர்.

மேலும், இதேபோன்று தொடர்ந்து தூய்மைப் பணிகளை மேற்கொண்டு பேருந்து நிலையத்தின் சுகாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் எனப் பயணிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

## மானாமதுரை அருகே மேலநெட்டூர் கிராமத்தில் அக்டோபர் 14-ல் மக்கள் தொடர்புத் திட்ட முகாம்!




சிவகங்கை, அக்.10–
சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்திற்குட்பட்ட மேலநெட்டூர் கிராமத்தில், வரும் அக்டோபர் 14–ஆம் தேதி (புதன்கிழமை) மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் தொடர்புத் திட்ட முகாம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மானாமதுரை வட்டம், செய்களத்தூர் உள்வட்டம், மேலநெட்டூர் குரூப்பிற்குட்பட்ட மேலநெட்டூர் கிராமத்தில் உள்ள சமுதாயக் கூடத்தில், அக்டோபர் 14–ஆம் தேதி காலை 10 மணியளவில் இந்த முகாம் நடைபெற உள்ளது.

இம்முகாம் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

மாவட்ட நிர்வாகம் சார்பில் நடத்தப்படும் இந்த மக்கள் தொடர்புத் திட்ட முகாமில் பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மானாமதுரை வட்டம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

## ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்ட கிறித்தவர்களுக்கு ரூ.37,000 முதல் ரூ.60,000 வரை நிதியுதவி!

### தமிழ்நாடு முழுவதும் 600 பேருக்கு மானியம் ஜனவரி 31-க்குள் விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் அறிவிப்பு!



சிவகங்கை, அக்.10–
தமிழ்நாட்டைச் சேர்ந்த கிறித்தவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டு திரும்பிய பின்னர், அவர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம், நடப்பு ஆண்டில் அனைத்து கிறித்தவப் பிரிவுகளையும் சேர்ந்த 600 பேர் பயன்பெறும் வகையில் நிதியுதவி வழங்கப்பட உள்ளது.

யாருக்கு எவ்வளவு நிதியுதவி?

இத்திட்டத்தின் கீழ் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டு திரும்பியவர்களில்,

550 கிறித்தவர்களுக்கு தலா ரூ.37,000

50 கன்னியாஸ்திரிகள் மற்றும் அருட்சகோதரிகளுக்கு தலா ரூ.60,000

என்ற அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு ECS முறையில் அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக மானியத் தொகை செலுத்தப்படும்.

விண்ணப்பங்களை எங்கு பெறலாம்?

இத்திட்டத்திற்கான விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் கட்டணமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.bcmbcmw.tn.gov.in என்ற முகவரியிலிருந்தும் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விண்ணப்பிக்க கடைசி நாள் ஜனவரி 31!

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் 31-01-2027-க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ஆணையர்,
சிறுபான்மையினர் நலத்துறை,
கலசமஹால் பாரம்பரியக் கட்டடம்,
முதல் தளம்,
சேப்பாக்கம்,
சென்னை 600 005.

எனவே, ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டு திரும்பிய தகுதியுடைய கிறித்தவர்கள் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்துப் பயன்பெறுமாறு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சிவகங்கையில் அனுமதிச் சீட்டு விதிமீறல் புகார்: கிராவல் மண் ஏற்றி வந்த 2 டாரஸ் லாரிகள் பறிமுதல்!

### 12 யூனிட் கிராவல் மண் சிக்கியது வாகன உரிமையாளர், குவாரி உரிமையாளர் குறித்து போலீசார் விசாரணை!




சிவகங்கை, அக்.10–
சிவகங்கை மாவட்டம், திருக்கோஷ்டியூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காட்டாம்பூர் அருகே, கனிமப் போக்குவரத்து அனுமதிச் சீட்டில் முரண்பாடுகள் இருந்ததாகக் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, 12 யூனிட் கிராவல் மண் ஏற்றி வந்த இரண்டு டாரஸ் லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

வாகனத் தணிக்கையில் சிக்கிய லாரிகள்!

காரைக்குடி மதுரை தேசிய நெடுஞ்சாலையில், காட்டாம்பூர் அருகே அக்டோபர் 8–ஆம் தேதி மாலை 3.30 மணியளவில், கனிமவளத் துறை தனி வருவாய் ஆய்வாளர் பாலமுருகன் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது அவ்வழியாக வந்த TN 63 BW 5925 மற்றும் TN 63 CU 6829 ஆகிய பதிவு எண்களைக் கொண்ட இரண்டு டாரஸ் லாரிகளை நிறுத்திச் சோதனை செய்தார்.

சோதனையில், இரண்டு லாரிகளிலும் சேர்த்து மொத்தம் 12 யூனிட் கிராவல் மண் ஏற்றப்பட்டிருந்தது தெரியவந்தது.

அனுமதிச் சீட்டில் முரண்பாடு!

விசாரணையில், சிங்கம்புணரி வட்டம் பிரான்மலையில் செயல்படும் யோகஸ்ரீ ப்ளூ மெட்டல் குவாரியிலிருந்து கிராவல் மண் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனிமப் போக்குவரத்து அனுமதிச் சீட்டில், கிராவல் மண்ணைக் காளையார்கோவிலுக்கு எடுத்துச் செல்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், அந்த அனுமதிச் சீட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த நேரம் மற்றும் பயணத் தொலைவு (கிலோமீட்டர்) விவரங்களில் முரண்பாடுகள் இருந்ததாக வருவாய் ஆய்வாளர் கண்டறிந்துள்ளார்.

இதனால், ஒரே அனுமதிச் சீட்டைப் பயன்படுத்திப் பலமுறை கிராவல் மண் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

காவல் நிலையத்தில் லாரிகள் ஒப்படைப்பு!

இதையடுத்து, இரண்டு டாரஸ் லாரிகளும் அவற்றில் இருந்த 12 யூனிட் கிராவல் மண்ணுடன் திருக்கோஷ்டியூர் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

மேலும், சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர் மற்றும் குவாரி உரிமையாளர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கோரி கனிமவளத் துறை தனி வருவாய் ஆய்வாளர் பாலமுருகன் புகார் அளித்துள்ளார்.

காவல் ஆய்வாளர் மகேஸ்வரி விசாரணை!

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957–ன் பிரிவுகள் 4 மற்றும் 21 தொடர்பாக அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், திருக்கோஷ்டியூர் காவல் நிலைய ஆய்வாளர் மகேஸ்வரி விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

அனுமதிச் சீட்டு முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதா, இதில் வேறு யாருக்கேனும் தொடர்புள்ளதா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.






## மானாமதுரையில் தேவேந்திர குல வேளாளர் வட்டார சங்கம் திறப்பு விழா!

### வசந்தநகரில் புதிய சங்க அலுவலகம் திறப்பு கிராமியக் கலைஞர் அண்டக்குடி ராஜு உள்ளிட்டோர் பங்கேற்பு!

மானாமதுரை, அக்.10–
சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் புதிதாக உருவாக்கப்பட்ட தேவேந்திர குல வேளாளர் வட்டார சங்கத்தின் திறப்பு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

மானாமதுரை ராமேஸ்வரம் பிரதான சாலை அருகே உள்ள வசந்தநகர் பகுதியில் புதிய சங்க அலுவலகம் திறக்கப்பட்டது.

இந்தத் திறப்பு விழாவில் பரமக்குடியைச் சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சங்க நிர்வாகிகள், பரம்பை பாலா மற்றும் அவரது நண்பர்கள், சகோதரர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேலும், சங்கத் தலைவர் காந்தி மற்றும் நிர்வாகிகள், மானாமதுரை பகுதியைச் சேர்ந்த சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் விழாவில் பங்கேற்றனர்.

சிறப்பு அழைப்பாளராக அண்டக்குடி கிராமத்தைச் சேர்ந்த பிரபல கிராமியக் கலைஞரும் பாடகருமான அண்டக்குடி ராஜு கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

புதிய சங்கத்தின் திறப்பு விழாவில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், நண்பர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் காசநோய் விழிப்புணர்வு குறித்த தேசிய அளவிலான ஜோஷ் அணி துவக்கவிழா




தேனி அக்.10–
தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் காசநோய் விழிப்புணர்வு குறித்த தேசிய அளவிலான ஜோஷ் அணி (JOSH -Joint Squad for Health) துவக்கவிழா நிகழ்ச்சி காணொளிக்காட்சி வாயிலாக நடைபெற்றதையொட்டி, இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ,மரு.இரா. வைத்திநாதன்,பங்கேற்று, மாவட்ட அளவிலான ஜோஷ் அணியை துவக்கி வைத்து பேசியதாவது,

தேசிய காசநோய் விழிப்புணர்வுத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திடும் பொருட்டு, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் மருத்துவக் கண்காணிப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், இந்தாண்டு தேசிய அளவிலான ஜோஷ் அணி துவங்கப்பட்டுள்ளது. இதில் மாவட்ட நிலையிலான அலுவலர்கள், கல்லூரி அளவிலான தேசிய மாணவர்படை (NCC), யுவபாரத தன்னார்வலர்கள் மற்றும் சுகாதாரப்பணியாளர்கள் பங்கேற்றுகிராமப்பகுதிகளிலிருந்து நகரப்பகுதிகள் வரை அனைத்து இடங்களிலும் பொதுமக்களிடம் காசநோயினால் ஏற்படும் தீமைகள் மற்றும் காசநோய் எவ்வாறு உருவாகிறது, அதை எந்த முறையில் தடுத்து, பாதுகாப்பாக ஆரோக்கியமுடன் இருந்திட வேண்டும் என வழிகாட்டும் பணிகளை ஜோஷ் அணியினர் மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, ஊரகப்பகுதிகளான இ.புதுப்பட்டி,டி. சிந்தலைச்சேரி, தாடிச்சேரி,கன்னியப்பப்பிள்ளைபட்டி மற்றும் காமராஜபுரம் ஆகிய 5 ஊராட்சிகளில் பேரணி, சுவர்விளம்பரங்கள் துண்டுப்பிரசுரங்கள் வழங்குதல், ஆலோசனைகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விழிப்பு ணர்வுப் பணிகளை மேற்கொள்ள உள்ளனர். குறிப்பாக, இந்த அமைப்பினர் ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்களிடம் காசநோயின் அறிகுறிகள், தடுப்பு முறைகள், ஆரம்பக்கட்ட பரிசோதனை மற்றும் முழுமையான சிகிச்சை முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் இந்நோய் தாக்குதல் உள்ளவர்களை கண்டறிந்து அவர்கள் பூரணக் குணமடைய வழிகாட்டியாகவும், ஒவ்வொருவரும் தன்னால் முடிந்தவரை காசநோய் தாக்குதலிருந்து பாதுகாப்பாக இருந்திடும் வகையில் உறுதுணையாகவும் இருந்து தங்களது பங்களிப்பை அளித்தனர்.



■ நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம் உலிக்கல் பகுதியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும் கராத்தே தற்காப்பு பயிற்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாணவ, மாணவியர்களிடம் கலந்துரையாடினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161